








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 48 26.11.2025




**ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:**

# உள்ளே....

## படித்து
## பின்பற்ற வேண்டிய
## முத்துக்கள்
## உபதேசங்கள்




## முத்துக்கள்

எழுந்திருப்பது, உட்காருவது, உண்ப அருந்துவது, தூங்குவது, விழிப்பது, நினைப்பது, சிந்திப்பது, கனவு காண்பது, த்யானம் செய்வது, ஸமாதியில் அமர்வது எல்லாமே செயல்கள்தாம். ஆகவே உடல் உள்ளவரை மனிதன் தன் இயல்புக்கு ஏற்றவாறு ஏதாவது செயல் செய்து கொண்டுதான் இருப்பான். எந்த மனிதனும் ஒரு கணம்கூட ஏதாவது ஒரு வகையில் செயல்புரியாமல் இருக்க முடியாது. ஆனால் அவற்றில் 'நான் கர்த்தா' என்ற எண்ணத்தைத் துறக்கலாம். மமகாரம், பற்று, பயனைக் கருதுதல் இவற்றை த்யாகம் செய்யலாம். இப்படிச் செய்வதுதான் அவற்றை முழுமையாக த்யாகம் செய்வது என்பதன் பொருள்.

# பகவத் கீதையிலிருந்து

| இன்றைய ஸாம்யவாதி | கீதையின் ஸாம்யவாதி |
|---|---|
| 1. பகவானுக்கு விரோதமானவர். | 1. எங்கும் பகவானைப் பார்ப்பவர். |
| 2. தர்மத்தை அழிப்பவர். | 2. ஒவ்வொரு நிலையிலும் தர்மத்தைப் பேணுபவர். |
| 3. ஹிம்ஸையே உருவானவர். | 3. அஹிம்ஸையின் ஆதர்ச புருஷர். |
| 4. தன்னலவாதி. | 4. தன்னலத்தைத் தன்னிடம் அணுகவே விட மாட்டார். |
| 5. உடைப் பழக்கங்களில் உணவு, வெளிப்படையாக ஸம்பாவனை காட்டிவிட்டு உள்ளத்தில் வேற்றுமை பாராட்டுவார். | 5. உணவு, ஸ்பர்சம் இவற்றில் சாஸ்த்ர முறைப்படி உலகியலில் சில வேற்றுமைகளைப் பாராட்டினா லும் உள்ளத்தில் வேற்றுமை பாராட்டுவதில்லை. மேலும் எங்கும் பரமாத்மாவையே ஸமமாகப் பார்ப்பதற்கு வழி காட்டுகிறார். |
| 6. லக்ஷ்யம் உலகாயதப் பொருளை அடைவதே. | 6.லக்ஷ்யம் பரம்பொருளை அடைவதே. |
| 7. தன் கட்சியில் பிடிப்பும், பிறரைப் பொருட்படுத்தாமையும் உண்டு. | 7. அபிமானமே கிடையாது, எங்கும் பரமாத்மாவையே பார்த்து எல்லோரையும் மதிப்பார். |
| 8. வெளி நடத்தை முக்யம். | 8. உள்ள மனப்பாங்குதான் முக்யம். |
| 9. உலகியல் இன்பத்தில் நாட்டம். | 9. ஆன்மிக ஸுகத்தில் நாட்டம். |
| 10. பிறர் செல்வத்திலும், கொள்கை யிலும், கருத்திலும் பொறாமை. | 10. ஸமமான பரந்த மனப்பான்மை. |
| 11. விருப்பு - வெறுப்பு உண்டு. | 11. எல்லோரிடமும் விருப்பு - வெறுப்பில்லாத ஸமமான நடைமுறை. |

செய்யும் பாவங்களின் காரணமாகத்தான் மனிதனுக்குத் துன்பம் நேர்கிறது. கர்மயோக ஸாதனையினால் ஸகல பாவங்களும் அழிகின்றன; மனம் பரிசுத்தமாகிறது. அவ்விதம் பரிசுத்தமான மனதில்தான் ஸாத்விகமான அமைதி உண்டாகும். ஆகவே, ஸாத்விகமான அமைதியினால் எல்லா துக்கங்களும் அழியும் என்பது ந்யாயம்தான் (BG 18/36,37).

*****************************************************

# கீதை கூறும் சில முக்யமான விஷயங்கள்

## குணங்களை அடையாளம் கண்டு கொள்வது

கீதையில் ஸாத்விக, ராஜஸ, தாமஸப் பொருட்கள், மனப்பாங்குகள், செயல்கள் இவை முக்யமாக இனம் பிரித்துக் கூறப்படுகின்றன. அவை வருமாறு-

அ) எந்த மனப்பாங்கில், செயலில் தன்னலம் சிறிதுகூட இல்லையோ, பற்றும், மமகாரமும் இல்லையோ, எதன் பயன் பகவானை அடைவதோ அது ஸாத்விகம் ஆகும்.

ஆ) எந்த மனப்பாங்கில் அல்லது செயலில் பேராசை, தன்னலம், பற்று இவை உள்ளனவோ, எதன் பயன் கணப்பொழுது ஏற்படும் உலகியல் இன்பமோ, விளைவில் துயரமோ அது ராஜஸம் ஆகும்.

இ) எந்த மனப்பாங்கில் அல்லது செயலில் ஹிம்ஸை, மோஹம், தடுமாற்றம் உள்ளனவோ, எதன் விளைவுகள் துன்பமும், அஞ்ஞானமுமோ அது தாமஸம் ஆகும்.

இவ்விதம் மூன்றுவிதமான மனப்பாங்குகள், செயல்கள் இவற்றின் வேறுபாடுகளைக் கூறி, பகவான் ஸாத்விகமான மனப்பாங்கையும், செயல்களையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும், ராஜஸ, தாமஸ மனப்பாங்கையும், செயல்களையும் தவிர்க்கவேண்டும் என்றும் ஆணையிடுகிறார்.

*************************************************

ஆசார்யனை மனிதன் என்று எண்ணாமல், எம்பெருமானே ஆசார்ய ரூபமாய் அவதரித்திருக்கிறான் என்று எண்ணி எம்பெருமானிடத்தில் போலே ஆசாரியனிடத்திலும் மிகுந்த பக்தி செய்தல் வேண்டும்.

*************************************************

மனிதன் எந்த நிலையில் இருந்தாலும் தனது வர்ணம், ஆசிரமம், இயல்பு, சூழ்நிலை இவற்றிற்கேற்றவாறு விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்து கொண்டுதான் இருக்க வேண்டும். இதை நிரூபிப்பதற்காக வரிசையாகக் கீழ்க்கண்ட விஷயங்களைக் பகவான் கூறினார் -

(1) கர்மம் செய்யாமல் நைஷ்கர்ம்யம் என்பதான கர்மநிஷ்டை கிடைக்காது (3/4).

(2) கர்மங்களைச் செய்யாமல் விடுவதால் மட்டும் ஞான நிஷ்டை பெற முடியாது (3/4).

(3) ஒரு கணம்கூட மனிதன் செயல் ஆற்றாமல் இருக்க முடியாது (3/5)

(4 ) வெளிப்படையாகக் கர்மங்களை ஆற்றாமல் விட்டு விட்டு, மனதில் அவற்றின் பயன்களான போகங்களையே நினைத்துக் கொண்டிருப்பது, போலி நடத்தை ஆகும் (3/6).

(5) மனதையும், புலன்களையும் வசப்படுத்திப் பற்றற்றுக் ஆற்றுபவன் சிறந்தவன் (3/7).

(6) கர்மங்களைச் செய்யாமல் இருப்பதைக் காட்டிலும், கர்மங்களைச் செய்வதே மேல் (3/8).

(7) செயல் ஆற்றாமல் இருந்தால் அன்றாட வாழ்க்கை நடைபெறாது (3/8).

(8) வேள்வியாகச் செய்யப்படும் கர்மம் பந்தப்படுத்தாது; மோக்ஷத்தை அளிக்கும் (3/9).

(9) கர்மம் செய் என்பது ப்ரஜாபதியின் ஆணை. தன்னலம் கருதாது அதை ஏற்பதே மேன்மையைக் கொடுக்கும் (3/10,11).

(10) கடமைகளை ஆற்றாமல் அவற்றின் பயன்களை அனுபவிப்பவன் திருடன் (3/12).

(11) கடமைகளை ஆற்றி, வேள்வியில் மிகுந்ததை உடல் பேணுவதற்காக உண்பவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான் (3/13).

(12) வேள்விகளைப் புரியாமல், உடலைப் பேணுவதற்காக மட்டும் அன்னம் சமைப்பவன் பாவியாவான் (3/13).

(13) கடமைகளை ஆற்றாமல் விட்டுவிட்டுப் படைப்புச் சக்ரத்திற்குத் தடை போடுபவனுடைய வாழ்க்கை வீண்; பாவமயமானது (3/16).

(14) பற்றற்றுக் கர்மம் செய்வதால் பரமாத்மாவை அடையலாம் (3/19).

(15) முன்பு ஜனகர் முதலானோரும் கர்மங்களை ஆற்றித்தான் பேறு பெற்றார்கள் (3/20).

(16) உலகத்தார், மேன்மக்களான பெரியோர்களின் வழியைப் பின்பற்றுவர். ஆகவே பெரியோர்களும் கர்மங்களை ஆற்றத்தான் வேண்டும் (3/21).

17.பகவானுக்குக் கர்மங்களே கிடையா. ஆயினும் அவரும் உலகிற்கு வழிகாட்டியாகக் கர்மங்களை ஆற்றுகிறார் (3/22).

(18) ஞானிக்கும் கடமைகள் கிடையா. அவரும் உலகத்திற்கு வழிகாட்டியாகக் கர்மங்களை ஆற்றத்தான் வேண்டும் (3/25).

(19) ஞானி கர்மங்களைச் செய்யாமல் விட்டுவிட்டோ, கர்மங்களைச் செய்யாமல் விடலாம் என்று உபதேசம் செய்தோ எவ்விதத்திலும் மக்களைக் கடமைகளிலிருந்து வழுவச் செய்யக் கூடாது. ஞானி தானும் கர்மங்களை ஆற்றி மற்றவர்களையும் ஊக்குவிக்க வேண்டும் (3/26).

(20) விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்யாமல் விட்டுவிடுவதற்கு மக்களுக்கு உபதேசம் செய்து, கர்மத்தில் ஈடுபட்ட மனிதர்களைக் கலைக்காமல் இருப்பதுதான் ஞானிகளுக்கு உசிதம் ஆகும் (3/29).